**Deposition of Witness**

**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti.**

**Case No : C.C.No. 486 /2015**

**PW - 2** **27/06/2023**

| | |
|---|---|
| **Name** | ஜேசுதாசன் |
| **Father's Name** | ஜோசப் |
| **Village** | கரிசல்குளம் |
| **Taluk** | கோவில்பட்டி |
| **Caste** | -- |
| **Calling** | மளிகை கடை |
| **Religion** | கிறிஸ்டியன் |
| **Age** | 53 |

(Accused A1 present A2 present.)

**முதல் விசாரணை**

1. எனக்கு சொந்த ஊர் கரிசல்குளம் ஆகும், நான் தற்போது சென்னையில் மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மைத்துனர். எதிரிகள் இருவரும் எனது அண்ணன் பையன்கள். 01-07-2015 அன்று சென்னையில் இருந்து கரிசல்குளம் வந்திருந்தேன், அங்கு எனது அண்ணனுக்கு சொத்து பிரச்சனை இருந்தது. 03-07-2015 ம் தேதி எங்கள் ஊர் அந்தோதணி காம்பளக்ஸ் அருகே நானும் அ.சா.1 ம் வந்து கொண்டிருந்தபோது இந்த வழக்கின் எதிரிகள் கெட்ட வார்த்தைகளால் பேசி என் சொத்தை திருப்பி கொடுங்கடா என்று பேசினார்கள், அதற்கு எனது அ.சா.1 ஏன் இவ்வாறு பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு நீ யாருடா என்று சொல்லி கையில் வைத்திருந்த கம்பியால் அசா.1 ஐ எதிரிகள் அடித்து விட்டார்கள்.

2. அதில் தலையின் இடது பக்கம் அ.சா.1 க்கு ரத்தம் காயம் ஏற்பட்டது. என்றைக்கு இருந்தாலும சாவு என் கையில்தான் என்று எதிரிகள் அ.சா.1 ஐ மிரட்டி சென்றார்கள். இது சம்பந்தமாக அ.சா.1 எதிரிகள் மீது வழக்கு கொடுத்திருந்தார், இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நானும், அசா.1 , மற்றும் சில பேர்கள் சேர்ந்து எதிரிகளை தாக்கியதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. அந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் எங்கள் ஊருக்கு வந்து சம்பந்தப்பட்ட எங்களை காவல்நிலையம் அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான்.

3. அ.சா.1 ல் காயம்பட்டதில் சட்டையில் ரத்தம் பட்டது என்றாலும் சம்பவத்தில் அ.சா.1 மயக்கமடைந்துவிட்டார் என்றாலும் மயக்கமடையவில்லை ,ரத்த காயம் இருந்தது, அவரது ஆடையில் ரத்தம் பட்டது.

4. என் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் இடையே சொத்து பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான், எதிரிகள் எனது உடன் பிறந்த அண்ணனின் பிள்ளைகள்.

5. சொத்தை விற்றுவிட்டு பங்கு கொடுக்காமல் நான் மட்டுமே எடுத்துக்கொண்டு சென்றுவிட்டேன் என்பது எதிரி தரப்பினுடைய புகார் என்றால் சரிதான்.

6. எனது தாய் , தந்தையை சென்னைக்கு அழைத்து சென்றேன் என்றால் வருவதாக கூறியதால் அழைத்து சென்றேன். அங்கு போய் தாயார் இறந்து விட்டார் பின்னர் அவரை சொந்த ஊருக்கு கொண்டு வந்து அடக்கம் செய்தேன் என்றால் சரிதான்.

7. எதிரி குடும்பத்தில் இருந்து எனது தாயாரை நான் கொன்று விட்டதாக எதிரிகள் தரப்பில் புகார் கொடுக்கவில்லை. போலிசார் என்னை அழைத்து இறப்பிற்கான காரணம் கேட்டு ஆவணங்களை கொண்டு வரச்சொன்னார்கள் என்றால் இல்லை.

8. எனது தந்தை என்னோடு சென்னையில் இல்லை, கரிசல்குளத்தில் இருந்து வருகிறார்.

9. எனது குடும்ப சொத்திற்கு 7 பங்காளிகள் உண்டு. குடும்ப சொத்தை

விற்க வேண்டும் என்றால் பங்காளிகள் அனைவரும் கையெழுத்து போட்டால்தான் அது சட்டப்படி செல்லும் என்றால் என் அம்மா உயிருடன் இருந்த காலத்தில் என் அம்மா மட்டும் கையெழுத்து போட்டால் போதும் அது சட்டப்படி செல்லும்.

10. சொத்துகள் அனைத்தும் எனது அம்மா பெயரில் இருந்தது , அவர்கள் சம்பாதித்து வாங்கிய சொத்து. அந்த சொத்துகள் அனைத்தும் எனது அப்பாவினுடைய சம்பாத்தியத்தில் வாங்கிய சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

11. சொத்து சம்பந்தமாக சிவில் வழக்குகள் நடக்கிறதா என்றால் இல்லை.

12. சம்பவ நேரத்தில் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் கூடிவிட்டார்கள் என்றால் சுமார் 10 பேர் கூடியிருப்பார்கள். அந்த காம்பளக்ஸ்ல் மொத்தம் 4 கடைகள் உள்ளன என்றால் சரிதான். அந்த 4 கடைகளிலும் சம்பத்தின்போது ஆட்கள் இருந்தார்கள் என்றால் இருந்திருக்கலாம்.

13. எதிரிகள் எங்களை நோக்கி வரும்போதே கம்பிகளை கொண்டு வந்தார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியுள்ளேன்.

14. அந்த கம்பி என்ன வகையான கம்பி என்று சொல்லவில்லை. கம்பியின் தடிமன் விரல் அளவு இருக்குமா என்றால் இருக்கலாம். கம்பியின் நீளம் சுமார் 4 அடி இருக்கும்.

15. சம்பவம் தெரிந்து போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சரியல்ல, நாங்கள் காவல்நிலையம் சென்றோம், போலிசார் என்னையும், செல்வகுமார் என்பவரையும் கைது செய்தனர்.

16. எதிரிகள் தரப்பில் கொடுத்த புகாரின் அடிப்படையில் போலிசர் எங்களை தேடி ஊருக்குள் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான், அவர்கள் வரும்போது 12.30 மணி இருக்குமா என்றால் 3.00 மணிக்கு மேல் இருக்கும்.

17. போலிசார் வந்து அனைவரையும் காவல்நிலையத்திற்கு வரச்

சொன்னார்கள் என்றால் அது பற்றி தெரியாது.

18. இந்த வழக்கு விபரம் அ.சா.1 ன் அப்பாவிற்கும் அவரது சகோதரருக்கும் தெரியாது என்றால் ஊரில்தான் இருக்கிறார்கள், சம்பவ இடத்தில் இல்லை.

19. அசா.1 ஐ மருத்துவமனைக்கு நான்தான் அழைத்து சென்றேன் என்றால் நான் அழைத்து செல்லவில்லை எனது அக்காள் மகன் இக்னேஷ்வரன் அழைத்து சென்றார்.

20. இக்னேஷ்வரன் சம்பவ இடத்தில் இருந்தார். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

21. சொல்வது போல சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் எந்த வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை, குடும்ப சொத்தை விற்று பணத்தை எடுத்து சென்றுவிட்டதால் , எதிரி தரப்பில் நடவடிக்கை எடுக்க இருந்ததால் நாங்கள் தான் வந்து எதிரிகள் தாக்கி அது சம்பந்தமாக புகார் கொடுக்கப்பட்டுவிட்டதால் அதில் இருந்து தப்பிக்க எதிர் வழக்காக பொய்யாக இந்த புகார் வழக்கு கொடுத்து அதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**

**என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு**

தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.